[2017 ஜூன் 15

18—

வேளாண்மைக் கல்லூரி

***3456—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் ஒன்றியத்தில் புதிய வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் ஒன்றியத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்' என்ற பாடல் வரிகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இலக்கணமாய் நாடும், ஏடும் போற்றிய ஒப்பற்ற தனிப்பெருந் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களையும், அவர் காட்டிய வழியில் இன்று நல்லாட்சி நடத்துகின்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம் முழுக்க முழுக்க வேளாண் தொழில் சார்ந்த முதன்மையான மாவட்டம். அரசு விதிகளை பூர்த்தி செய்கின்ற விதத்தில், எதிர்காலத்தில் செய்யாறு தொகுதியில் புதிய வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா? மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

2017 ஜுன் 15]

அவர்கள் பரிசீலனை செய்வார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டுமானால் குறைந்தது ரூ.50 கோடி நிதியும், 110 ஏக்கர் விவசாய நிலமும், ஒரு பட்டப்படிப்பிற்குத் தேவைப்படுகிறது. அதிகப்படியான ஒவ்வொரு பட்டப்படிப்பிற்கும் 50 ஏக்கர் அதிகப்படியான நிலம் தேவை. மேலும், செய்யாறு தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின்கீழ் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருவண்ணாமலை மாவட்டம், வாளவச்சனூரில் செயல்பட்டு வருகிறது. மேலும், பின்வரும் தனியார் கல்லூரிகளான Don Bosco Agriculture College மற்றும் ஆதி பராசக்தி வேளாண்மைக் கல்லூரிகள் வேலூர் மாவட்டத்திலும், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி திருச்சிராப்பள்ளியிலும், Thanthai Roever Institute of Agriculture and Rural Development, பெரம்பலூர் மாவட்டத்திலும், அதியமான் வேளாண்மைக் கல்லூரி கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், J.S.A. வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி கடலூர் மாவட்டத்திலும் இயங்கி வருகின்றன. செய்யாறு தொகுதி மாணவர்கள் மேற்கண்ட கல்லூரிகளைத் தேர்வு செய்து பயன் பெறலாம். மேலும், வேளாண்மை சார்ந்த சந்தேகங்களுக்கு மேற்கூறிய கல்லூரிகளும், செய்யாறுக்கு அருகில் திருவண்ணாமலையில் செயல்பட்டு வரும் சிறுதானிய மகத்துவ மையம், விருத்தாசலத்தில் செயல்பட்டு வரும் மண்டல ஆராய்ச்சி நிலையம் மற்றும் திண்டிவனத்தில் செயல்பட்டு வரும் எண்ணெய்வித்துகள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றைத் தொடர்புகொண்டு வேளாண் பெருமக்கள் அங்கு பயிர் சார்ந்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எனவே, செய்யாறு தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்றாலும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியுடன் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வரின் பொற்கால ஆட்சியில் உங்களுடைய கோரிக்கை நிறைவேறுகின்ற அளவில் உங்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

முற்பகல் 11–05

திரு. தூசி கே. மோகன்: நன்றி. கொடுப்பதற்காகவே இருக்கின்ற அரசு அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. (குறுக்கீடு) ஆமாம் (குறுக்கீடு) அந்த வகையில், அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுப்பதற்காகவே இருக்கின்ற அரசு. அந்த வகையில், தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலான அரசு கொடுத்துக்கொண்டிருக்கிற அரசு; அவர் கொடுத்துக்கொண்டேயிருப்பவர். (குறுக்கீடு) ஆமாம், எதைக்கேட்டாலும் கொடுக்கின்ற அரசு. இன்றைக்கு நடைபெற்று வரும் அரசு 120 நாட்களைக் கடந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (குறுக்கீடு) அவர், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு)

திரு. தூசி கே. மோகன்: சட்டமன்றத்தில் எத்தனை கோரிக்கைகளை வைத்தாலும், அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார் என்பதனை பெருமையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலை அருகே அமைந்துள்ள தேனி மாவட்டத்தில் விவசாயப் பணிகள் செல்வச் செழிப்போடு நடைபெற்று வருகின்றன. முல்லை—பெரியாறு, வைகை ஆறு, கொட்டக்குடி ஆறு, மஞ்சள் ஆறு ஆகிய ஆறுகள் சூழ்ந்த அந்த

2017 ஜூன் 15]

மாவட்டத்தில் தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்பது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. எனவே, தோட்டக்கலை பல்கலைக்கழகத்தை இந்த ஆண்டே துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், பெரியகுளத்தில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆகவே, அந்த தோட்டக்கலைக் கல்லூரியையும், ஆராய்ச்சி நிலையத்தையும் அப்பகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். (குறுக்கீடு) திரு. தங்க. தமிழ்ச்செல்வன், உட்காருங்கள். நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், மேல்செங்கத்தில் சுமார் 12,500 ஏக்கர் நிலம் மத்திய வேளாண்மை பண்ணை அமைப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு அதை அங்கிருந்து காலி செய்துவிட்டு, அந்த இடத்தை வேளாண்மைத் துறையிடம் ஒப்படைத்துள்ளது. எப்படி கோயம்புத்தூரிலே ஒரு வேளாண்மை பல்கலைக்கழகம் இருக்கிறதோ அதைப்போல மேல்செங்கத்திலே இருக்கிற நிலத்தைப் பயன்படுத்தி திருவண்ணாமலை மாவட்டத்திலும் வேளாண்மை பல்கலைக்கழகம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருவண்ணாமலை மாவட்டம், விவசாயத்தை நம்பியிருக்கிற மாவட்டமாக இருப்பதால், அதை அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

வீட்டுமனைப் பட்டா

***5256—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதி, 6—வது கோட்டம், தந்தை பெரியார் நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி பகுதி, 6—வது கோட்டம், தந்தை பெரியார் நகர் பகுதி என்பது 'கரடு புறம்போக்கு' என கிராமக் கணக்கில் பதிவாகியுள்ளது. மேலும், அஸ்தம்பட்டி 6—வது கோட்டம், தந்தை பெரியார் நகர் பகுதி என்பது மாநகராட்சி பகுதியிலிருந்து 8 கி.மீ. தொலைவிற்குட்பட்ட பகுதியாக உள்ளது. எனவே, அரசாணை எண் 3166, வருவாய்த் துறை, நாள் 6—11—1996—ன்படி, மாநகராட்சி பகுதியிலிருந்து 8 கி.மீ. தொலைவிற்குட்பட்ட பகுதிகளில் பட்டா வழங்க வழிவகை இல்லாத நிலை உள்ளது. எனினும், இப்பகுதியில் தற்போது குடிசை மாற்று வாரியத்தின் திட்டத்திற்காக நிலங்களைக் கண்டறியும் பணி வருவாய்த் துறையால் நடைபெற்று வருகிறது. தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு வருங்காலத் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்